# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 08.02.2022 supeedsam.com supeedsam@gmail.com





## உயர்தரப் பரீட்சை வினாத்தாள்;

# காலதாமதமாக வழங்கப்பட்டதாக மாணவர்களும், பெற்றோரும் விசனம்!



### கல்வியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்: சாணக்கியன்

(ரக்ஸனா)

கல்விப் பொதுத்தர உயர்தரப் பரீட்சை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு(களுவாஞ்சிகுடி) தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்தில் நடைபெற்ற பரீட்சையின் போது வினாத்தாள் காலதாமதமாக வழங்கப்பட்டதாக மாணவர்களும், பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை முதலீடுகள், மீனவர்கள் பிரச்சினை

# பீரிஸ் - ஜெய்சங்கர் பேச்சு

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று திங்கட்கிழமை புது டெல்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது இலங்கையை பலப்படுத்தும் பொருளாதார மற்றும் முதலீட்டு முயற்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாக எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

02 ஆம் பக்கத்தில்...



## பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது: 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் பிணை!

குண்டுகளை தம் வசம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 2019 ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை பிணை வழங்கியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## தற்கொலை குண்டுத்தாரியின் தலை:

# வியாழேந்திரன் மீதான வழக்கு ஒத்திவைப்பு!

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட ஆறு பேர் மீதான வழக்கு எதிர்வரும் ஏப்ரல் 04ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு அன்று நடைபெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரியின் தலை மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராக மக்களினால் ஆர்ப்பாட்டம்

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பில் நடைபெற்ற சுதந்திர நிகழ்வில் 75 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜையான மட்டக்களப்பின் முன்னாள் அரசாங்க அதிபர் சி.புண்ணியமூர்த்தி அவர்களை கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

# காரைநகரில் 139 இந்தியப் படகுகள் ஏலத்தில் விற்பனை

### 59 இலட்சம் ரூபா வருவாய்

யாழ்ப்பாணம் காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 139 இந்தியப் படகுகள் நேற்று திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இதன்போது 88அடி நீளமான மீன்பிடிப் படகொன்று அதிக தொகையாக 59 லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து வந்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள தலைமையக அதிகாரிகள் குழு காரைநகரில் ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன்,

இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ள படகுகளை

02 ஆம் பக்கத்தில்...








## அம்பிகா சற்குணநாதனிற்கு ஆதரவாக சிவில் சமூக அமைப்புகள் அறிக்கை -

# வெளிவிவகார அமைச்சின் அறிக்கைக்கு கண்டனம்



மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான அம்பிகா சற்குணநாதன் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையை கண்டித்தும் அவருக்கு ஆதரவு தெரிவித்தும் சிவில் சமூக

02 ஆம் பக்கத்தில்...






## ஹிஜாஸை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

20 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் சார்பில் பிணை கோரிய

02 ஆம் பக்கத்தில்...

# மூதூர் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையேற்பு



**(எப்.முபாரக்)**

பொலன்னறுவை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பதவி வகித்து நேற்று (7) முதல் மூதூர் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள் ஜுனைட் அல் அமீன் (SLAS) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

உதவி பிரதேச செயலாளர் கடமையேற்பு நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி. அறபாத் மற்றும் கணக்காளர் ஜே. நாளிர், நிர்வாக உத்தியோகத்தர் ஏ. அலாவுதீன், தலைமை சமுர்த்தி முகாமையாளர் திருமதி வி. கோடீஸ்வரி, கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.எம். ஜறூஸ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தி வரவேற்றனர்.

# அம்பிகா சற்குணநாதனிற்கு ஆதரவாக சிவில் சமூக அமைப்புகள் அறிக்கை

அமைப்புகளும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது. மனித உரிமைகள் சட்டத்தரணியும் ஆதரித்து வாதாடுநரும்இ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மற்றும் நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்தின் தலைவருமான அம்பிகா சற்குணநாதன் அவர்கள் 27 ஜனவரி 2022 அன்று இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய பாராளுமன்ற உப குழுவின் விளக்கத்தின்போது கூறிய விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் 4 பெப்ரவரி 2022 அன்று வழங்கப்பட்ட பதில் குறித்து கீழே கையொப்பமிட்டுள்ள சிவில் சமூகங்களைச் சார்ந்த தனிநபர்கள் மற ;றும் அமைப்புக்களாகிய நாம்மிகுந்த கரிசனை கொள்கின்றோம். சற குணநாதன் அவர்கள்

தன்னுடைய சமர்ப்பிப்பில் இலங்கையில் மனித உரிமைகள் சூழ்நிலை தொடர்பான விமர்சனப் பகுப்பாய் வினையும் இலங்கை அதன் பிரஜைகள் தொடர்பில் கொண்டுள்ள சர்வதேச மற்றும் தேசிய கடப்பாடுகளையும் முன்வைத்திருந்ததுடன்திருந்ததுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கு பரிந்துரைகளையும் வழங்கியிருந்தார்.

எழுப்பப்பட ட பிரச்சினைகளைக் கணிசமாகக் கையாள்வதற்கு பதிலாக இலங்கை அரசாங;கமானது இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்

காக கொள்கைசார் ஆய்வு ஆதரித்து வாதாடல் மற்றும் பகிரங்க சேவை ஆகியனவற் றில் ஈடுபட்டு அவை தொடர்பாகக் குற்றமற்ற பதிவுகளைக் கொண்டுள்ள தனிநபரொருவர் மீது அவதூறு செய ;வதற்கு முற்பட்டுள்ளது. தமிழ் செயற்பாட்டாளர் மற்றும் ஆய்வாள ஒருவரின் சுயாதீனமான நியாயப்பிரசாரத்திற்கும் தமிழ கழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கும இடையே ஒப்புமையினைக் காண்பிப்பதற்கு எத்தனித்துள்ள வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் முயற்சியானது தேவையற்றதும் தீங்கானதும் மற்றும் சில்லிட வைக்கின்றதுமான ஒன்றாக அமைந்துள்ளது. தமிழ் மற்றும் முஸலிம் சமுதாயங்கள் மீது

வேறுபாடானத் தாக்கத்தினை ஏற்படுத்ததக்க அரசா ங்கக் கொள்கைகள் அரச நிறுவனங்கள் மற்றும் அவர்களின் நடைமுறைகளை வெளிப்படுத்திக்காட்டுகின்றமையானது ஏதோ ஒரு வழியில் ‘சமுதாயங்களுக்கிடையிலான வெறுப்பினைத் தூண்டுகின்றது’ என்பதுடன் இது ‘சமூக ஒற்றுமைக்கு’ஊறு விளைவிக்கக் கூடியதாகும் என்ற குற்றச்சாட்டு; மிகவும் பிரச்சனைக்குரியதாய்

அமைகின்றது. அண்மைய கடந்த காலத்தில் இலங்கையில் முக்கிய தனிநபர்கள் மற்றும் சிறுபான் சமுதாயங்களின் உறுப்பினர்களை இலக்கு வைப்பதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம என்பன அரசினால் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அடிப்படையாகக் கொண்டு பாரக்கின்றபோது இவ்விடயம் அச்சுறுத துகின்றவகையில் அமைந துள்ளது.

தொழில் உரிமைகள் மனித உரிமைகள் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நடத்தை பற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் மதிப்பீட்டினை அடிபபடையாகக் கொண்டே இலங்கை ஜி.எஸ்.பிஒ வர்த்தக சலுகைகளைத் தக்க வைத்துக் கொள்ளுமா அல்லது அதனை இழக்குமா என்பது தீர்மானிக்கப்படும்.

மனித உரிமைகள் தொடர்பான ஆதரித்து வாதாடுதலே இலங்கை பொருளாதாரத ;திற்கு முக்கியமானதாய் அமைகின்ற ஜி.எஸ்.பிஒ வரிச் சலுகையினை இழக்கச் செய கின்றது என்ற யோசனையானது நேர்மையற்றதாகும்.

ஆபத்தான உட்குறிப்புக்களைப் பயன்படுத்தி அரசாங க நிறுவனமொன்றினால் தைரியமாக மற்றும் வெளிப்படையாகப் பேசுகின்ற சிவில் சமூக அமைப்புக்களின் உறுப்பினர்களை இலக்கு வைத்தலை உடன்பாடின்மைகளை மற்றும் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரத்தினை அடக்குவதனை இலக்காகக் கொண்ட அச்சுறுத்தல் வடிவமொன்றாகவே நாம்

கருதுகின்றோம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் செய்யப்பட்டுள்ள இத்தகைய அறிக்கைகள், ஜனநாயகம் மற்றும் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தில் இடைத்தரகராக செயற்படுகின்ற சிவில் சமூகங்களின் ஈடுபாட்டினையும் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் மற்றும் தனிநபர்களின் உரிமைகள் மற்றும பாதுகாப்பிற்காக செயற ;படுதலையும் தடுப்பதனை இலக்காகக் கொண்டுள்ளன என நாம் நம்புகின்றோம்.

சற்குணநாதன் அவர்களைப் போல சிவில் சமூகத்திலுள்ள பலர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்க ள் செயற்பாட்டாளர்களுக்கான செயற்பாட்டு சூழல் மற்;றும் அடக்குமுறை மிக்கதான புதிய சட்டமொன்றின் அச்சுறுத்தல் என்பன குறித்து தமது கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் பாதிக்கப்பட்டு தப்பி வாழ வோர் மனித உரிமைகள் செய ற்;பாட்டாளர்கள் ஊடக பணியாளர்கள் மற ;றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்போர் அரச செயற் பாட்டாளர்களால் தொடர்ச்சியாக துன்புறுத தலுக்கு ஆளாகின்ற சம்பவங கள் குறித்தும் நாம் ஆழ;ந்த கரிசனை கொள்கின்றோம். சிவில் சமூக அமைப்புக்கள் செயற்படுவதற்கான சூழலொன்றினை உருவாக்குவதற்கு, சிவில் சமூகம் பங்காளராகக் கருதப்படுகின்றது என கூறுகின்ற வெறும் உறுதிமொழிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் செயலகத்தினை புதிய அமைச்சொன்றிற ;கு மாற்றுதல் ஆகியன மாத்திரம் போதாது. இது தொடர்பாகவும் சற்குணநாதன் அவர்களால் சொல்லப்பட்டவையும எங்களால் ஆதரிக்கப்படுகின்றவையுமான ஏனைய கணிசமான பிரச்சினைகள் பற;றியும்

அரசாங் கத்துடன் நேர்மையான கொள்கைசார்மற்றும் ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபடுவதற் நாங்கள் விருப்பமாயுள்ளோ.ம் எவ்வாறெனினும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் இம்முறையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இலக்கு வைக்கப்படுதலானது உறுதிப்பாட்டினையோ அல்லது நம்பிக்கையினையோ ஊக்குவிக்காது.

நாங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இவ் அறிக்கையினை கண்டிக்கின்றோம் என்பதுடன் அம்பிகா சற்குணநாதன் அவர்களுடனும் இலங்கையில் மனித உரிமைகள் ஜனநாயகம் மற்றும்உண்மையான நல்லிணக்கத்தினை மேம்படுத்துகின்றதுகாக்கின்ற செயன்முறையில் ஈடுபட்டுள்ள ஏனைய அனைத்து சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும். இணைந்து ஒருமனதாய் நிற்கின்றோம்.

# உயர்தரப் பரீட்சை வினாத்தாள்;

நேற்றைய தினம் நடைபெற்ற இணைந்த கணிதபாட பரீட்சையின்போது, வழங்கப்பட்ட வினாத்தாள்களில் முதலாம் பகுதியும், இரண்டாம் பகுதியும், காலை 8.30 மணிக்கே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் குறித்ததாள்களில் இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 8.30 மணிக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, மற்றைய முதலாம் பகுதி வினாத்தாள் இன்னும் வழங்கப்படவிலலையே சேர் என மாணர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் கோரியதற்கிணங்க, அதன் பின்னர் காலை 10 மணியளவில் மற்றைய வினாத்தாள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், எனினும் பரீட்வை வினாத்தாள்கள் 11.40 மணிக்கு சரியாக முடிவுறுத்தப்பட்டதாகவும், மாணவர்களும், பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றர்.

இவ்விடையம் குறித்து பெற்றோர் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்குச் சென்று தமது பிள்ளைகளுக்கு நடந்த அநீதி தொடர்பில் எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விடையம் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், இரா.சாணக்கியன், பட்டிருப்பு வலயக்கல்வி அதிகாரிகளுடனும், பெற்றோர்களுடனும், கலந்துரையாடினார்.

நேற்று நடைபெற்ற பரீட்சையின்போது மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறு தொடர்பாக குறித்த பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தன்னிடம் தெரிவித்ததாக இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எனினும், மாணவர்களுக்கு நடந்த அநீதி தொடர்பில், தான் கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து அவரது கவனத்திற்குக் கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# 15 நாட்களாக தேடப்பட்டு வந்தவர் சடலமாக மீட்பு



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானை வயல் பகுதியிலிருந்து நேற்று திங்கட்கிழமை (07) சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயல் பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி வாழைச்சேனை பொலிஸார் அங்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் மயிலங்கரைச்சை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய சீனித்தம்பி யோகராசா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டுள்ள இவர், 15 நாட்களுக்கு முன்னர் வீட்டை விட்டு சென்றதாகவும், அவரை தேடி வந்ததாகவும் அவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகவும் குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

வயலில் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஹிஜாஸை பிணையில் விடுவிக்க

மீள்திருத்த விண்ணப்பம் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2020 ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விளக்கமறியலில் வைக்கப்பட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்ட சட்டத்தரணிக்கு எதிராக புத்தளம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பிணையில் விடுவிக்க கோரி தாக்கல் செய்த இரண்டு மனுக்கள் மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அவர் நாடியிருந்தார்.

# காரைநகரில் 139 இந்தியப் படகுகள் ஏலத்தில்

கடந்த ஒருவாரமாக அதிகமனோர் பார்வையிட்ட நிலையில் நேற்றைய தினமும் பலரும் பார்வையிட்டனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்தவர்கள் ஏலத்தில் ஆரம்ப வைப்பு தொகையாக 1,000 ரூபாய் பணத்தை செலுத்தி ஏலத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இலங்கையின் 5 துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களிற்குச் சொந்தமான மீன்பிடிப் படகுகள் நேற்று முதல் 5 இடங்களில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

# பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது; 8 பேருக்கு

2019 ஆம் ஆண்டு முதலாம் மாதம் 5 ஆம் திகதி புளியங்குளம் பொலிஸாரால் கிளைமோர் குண்டை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதில் 9 ஆவது சந்தேக நபரான ஆனந்தராஜா என்பவர் கைது செய்யப்படாத நிலையில் திறந்த பிடியானை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த 8 பேருக்கும் ஆதரவாக சி எச் ஆர் டி நிறுவனம் சட்ட உதவியை வழங்கியிருந்தது.

இந்த நிறுவனத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கலும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை சபை குறித்த விடயம் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் பலனாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் %:1 பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரினால் பிணையில் விடுவிப்பதற்கான சம்மத கடிதம் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டிருந்தது.

இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் சார்பில் வவுனியா நீதிமன்றத்தில் சட்டத்தரணி செ. கேதீஸ்வரன் ஆஜராகி குறித்த கடிதம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பிரகாரம் 8 பேரும் இன்று பதில் நீதிபதி க. தயாபரனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# தற்கொலை குண்டுத்தாரியின் தலை;

ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த வியாழேந்திரன் உட்பட ஆறு பேருக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையக காவல்துறையினரால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த வழக்கினை ஏப்ரல் 04ஆம் திகதி வரை ஒத்திவைத்து தீர்ப்பளிக்கப்பட்டது.

# இலங்கை முதலீடுகள், மீனவர்கள் பிரச்சினை

மேலும், மீனவர்கள் விவகாரம் குறித்தும், இருதரப்பு பொறிமுறைகளை முன்கூட்டியே மேற்கொள்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் பேசப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் டெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் சென்றிருந்தனர்.

# கல்முனையில் இளம் முயற்சியாண்மையாளர்களின் சம்மேளனம் அங்குரார்ப்பணம்




(எம் எம் ஜெஸ்மின்)

கல்முனை இளம் முயற்சியாண்மையாளர்களின் சம்மேளனம் எனும் வர்த்தக அமைப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை (04) உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தன்நிறைவு கண்ட முயற்சியாணமையாளர்களை உருவாக்கும் நோக்கிலேயே இந்த சம்மேளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்மேளனத்தின் தலைவராக றிசாத் ஷெரீப், பொதுச்செயலாளராக எம்.எச். எம்.ஹனீபும், பொருளாளராக ஏ.ஆர். றிஸ்வானும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக குறித்த சம்மேளனத்தின் பொதுசன தொடர்பு செயலாளராக றிப்தி அலியும், பிரதித்தலைவர்களாக எம்.எம். ஜெஸ்மின் மற்றும் எம்.என். எம். இம்தியாஸுும், உதவி செயலளார்களாக ஏ.ஆர்.எம். நியாஸ் மற்றும் எம்.டி.எம். ஹினாஸுும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதே வேளை, டப்ளியூ. எம்.எம்.ஐ. இபாத், எம்.எச். எம்.முபாரிஸ், எம்.வை.ஏ. அசாம், டப்ளியூ.எம்.எம்.ஐ. இம்தாத், எஸ்.எல்.ஜஹான்கீர், எம்.றிஸ்வான், ஏ. தௌபீர், யூ.எல்.எம். மபாஸ் மற்றும் எஸ்.எச்.ஸலாஹுதீன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் க.பொ.த. உயர் தர பரீட்சையில் 9451 மாணவர்கள் தோற்ற தகுதி

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



மட்டக்ளப்பு மாவட்டத்தில் க.பொத. உயர்தரப்பரீட்சைக்கு இம்முறை 9451 மாணவர்கள் தோற்ற தகுதி பெற்றுள்ளதாக கல்வித்திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடளாவிய ரீதியில் 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர் தரப்பரீட்சை நேற்று(7) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும் நாடு பூராகவும் நடைபெறும் உயர்தர பரீட்சையில் இம்மாவட்டத்தில் 05 கல்வி வளயங்களில் 08 ஒருங்கிணைப்பு நிலையங்களூடாக %1 நிலையங்களில் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

இப்பரீட்சையில் இம்மாவட்டத்திலுள்ள 9451 பரீட்சாத்திகள் பரீட்சை எழுதுவதுடன் இவர்களில் 4034 ஆண் பரீட்சாத்திகளும,; 531% பெண் பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றனர். இவற்றில் தமிழ் மொழி மூலம் 9406 பரீட்சாத்திகளும், ஆங்கில மொழி மூலம் 42 பரீட்சாத்திகளும், சிங்கள மொழி மூலம் 03 பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றனர். இதில் தனியார் பரீட்சாத்திகள் 2580 இம்முறை பரீட்சைக்குத் தோற்றுவது விசேட அம்சமாகும்.

விசேடமாக கோவிட் 19 அறிகுறிகளுடன் காணப்படும் மாணவர்களுக்கு நாடுபூராகவும் 29 தனியான பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு பரீட்சை நடைபெறுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் கொவிட் 19 பாதிப்புக் குள்ளனவர்களுக்காக கரடியனாறு வைத்தியாசலையில் விசேட பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட பரீட்சாத்திகளுக்கு அந்தந்த பரீட்சைநிலையங்களில் தனியான அறைகளில் பரீட்சை எழுதுவதற்காக ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




# 1400கிலோ எடையுள்ள மாபெரும் காளி அம்பாள் விக்ரகம் குமுக்கனில் பிரதிஸ்டை







(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

1400கிலோ எடையுள்ள மாபெரும் காளி அம்பாள் விக்ரகமொன்று கிழக்கின் தென் எல்லையிலுள்ள குமுக்கன் ஆற்றுப்படுக்கையிலுள்ள குமுக்கன் மடத்தடி அம்மன்ஆலய வளாகத்தில் பிரதிஸ்டை செய்துவைக்கப்பட்டுள்ளது.

வன அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பில் அவர்களின் நேரடி வழிகாட்டலில் குமண சரணாலயத்தில் மாபெரும் சக்தி பீடமாக விளங்குகின்ற குமுக்கன் ஆற்றங்கரையின் மடத்தடி அம்மன் ஆலயத்தில் மாபெரும் காளி தேவியின் விக்ரக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சித்தர்களின் குரல் அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ இதனை முன்னின்று செயற்பட்டு பிரதிஸ்டை செய்துவைத்தார்.

உதவியாக இலங்கையின் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் துணைத்தலைவர் மனோகரன் சிவயோகி மகேஸ்வரன் ஸ்வாமிகள் உள்ளிட்ட பக்தர்கள் செயற்பட்டனர்.

சித்தர்களின் குரல் அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ கருத்துரைக்கையில்:

விக்ரமாதித்தன் பூஜித்த உச்சயினி பிரதேசத்தில் இருந்து கல்லை தெரிவு செய்து அதை சாமுத்ரிகா லட்சணங்களுடனும் 1400கிலோ எடையுள்ள மாபெரும் மஹா காளியாக வடிவமைத்து உயிர் கொடுத்த என் அன்புக்குரிய உலகம் அறிந்த மயன் வம்சத்தில் வந்த சிற்ப ஆச்சரியார் கலைமாமணி முத்தையா ஸ்தபதி அவர்களுக்கு நன்றிகள். உலகம் உள்ளவரை அவர் உருவாக்கிய இந்த அபூர்வ படைப்பு அவரின் பெயரை சொல்லிக்கொண்டே இருக்கும்.

அன்னை வாலைத்தாயின் பேரருளால் அனைத்து வித சிரமங்கள் இடர்களை தாண்டி பிரதிஷ்டை நடைபெற்றது. மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் மற்றும் வன பாதுகாப்பு துறை அதிகாரிகள் அனைவருக்கும் என் நன்றிகள்.

# கிழக்கு மாகாண அமைச்சுக்களின் புதிய செயலாளர்கள் தங்களின் கடமைகளை ஏற்றுக்கோண்டனர்











(பைஷல் இஸ்மாயில் )

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான இடமாற்றக் கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கடந்த 01 ஆம் திகதி வழங்கி வைத்தார். அதற்கமைவாக கிழக்கு மாகாண மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கலாநிதி.எம். கோபாலரெட்ணம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், முதலமைச்சின் செயலாளர் (திருமதி) பீ.கலாமதி, கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்க, பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) (திருமதி) ஆர்.யூ.ஜலீல், பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம்.மன்சூர் ஆகியோர்கள் தங்களின் அமைச்சுக் கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.






# வலப்பனை பிரதேச செயலகத்தின் உடவளை கிராம சேவையாளர் பிரிவில் ஆரம்ப வேலைத்திட்டத்தின் பிரதான வைபவம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

கிராமத்துடன் பேசும் தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைவாக 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட பிரேரணைகளினால் அமுலாக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைத்திட்டம் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் 05 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 491 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட ஆகியோரின் தலைமையில் வலப்பனை பிரதேச செயலகத்தின் உடவளை கிராம சேவையாளர் பிரிவில் ஆரம்ப வேலைத்திட்டத்தின் பிரதான வைபவம் நடைபெற்றது. வலப்பனை பிரதேச செயலாளர் ஆர்.ஏ.விஜேசிங்கவின் வழிகாட்டலின் கீழ் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், உத்தியோகபூர்வ நிழல் அலுவலகம் அமைப்பதற்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டது. நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம், வாழைத் தோட்டத்திட்டம், கோழிப்பண்ணை முகாமைத்துவத் திட்டம், வெற்றிலை தோட்டத் திட்டம், வயல் நிலங்களில் உள்ள கால்வாயில் அணை கட்டுதல் போன்ற அபிவிருத்திப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டம் முழுவதிலும் 2455 அபிவிருத்தித் திட்டங்களுக்காக முதற்கட்டமாக ரூபா 549,318,000.00 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# எந்தவித மக்களின் விடையங்களையும் நிறைவேற்றாமல் வெறும் சொல்லாட்சியாகவே நடைபேற்றும் கடந்தகால நல்லாட்சி

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்





(ரக்ஸனா)

எந்தவித பிரச்சனையும் இல்லாத சுமுகமான சூழ்நிலையில் நாட்டு மக்களின் விடையங்களை நிறைவேற்றாமல் வெறும் சொல்லாட்சியாகவே கடந்தகால நல்லாட்சி நடைபெற்றது. வேலையற்ற பட்டதாரிகள் வீதியோரங்களில் ஆர்ப்பாட்டங்களளை மேற்கொண்டார்கள், மாவட்டத்திலே உள்ள 410 குளங்களில் 90 சதவீதமான குளங்கள் புணரமைக்கப்படவில்லை. பல அபிவிருத்தித்திட்டங்களுக்கு அடிக்கற்கள் மாத்திரம்தான் நடப்பட்டன எதுவும் நடைபெறவில்லை.

என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் மாநாடு ஞாயிற்றுக்கிழமை(06) மட்டக்களப்பு பெரியபோரதீவில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில், எதுவித வீதிக்கட்டுமானங்கள், பாலங்கள், எதுவும் நடைபெற்றிருக்கவில்லை. தங்போதைய பிரதமர் ஜனாதிபதியாக இரந்த காலத்தில்தான் மண்முனைப்பாலம், கல்லடிப்பாலம், மற்றும் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் திட்டங்கள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனவே கடந்த நல்லாட்சியைப் பாதுகாத்தது தமிழ் தலைமைகளுக்கு பாரிய பங்கு உள்ளது. தமிழ் மக்களது நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சனைகளுக்கும் கடந்த கால அரசாங்கத்தால் தீர்வு வழங்கப்படவில்லை. அபிவிருத்திகளும், மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு இருந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அப்போது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பாதுகாத்திருந்தது. தற்போது ரணில்விக்கிரமசிங்க மாத்திரம் தேசியப்பட்டியல் ஊடாகவும், 22 உறுப்பினர்களாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு 16 ஆக குறைந்து தற்போது 10 பேர் மாத்திரம் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டள்ளார்கள்.

எமது அரசாங்கம் தற்போது 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கியுள்ளது. அதில் மட்டக்களப்பில் மாத்திரம் 2147 பேருக்குக் கிடைத்துள்ளது. அதில் 70 சதவீதமானவர்கள் பெண்கள், ஒரு லெட்சம் கிராமிய வீதிகள் அடிப்படையில் பல பில்லியன் மதிப்பீட்டிலான வீதிகள் புணரமைக்கப்பட்டு வரப்படுகின்றன. கடந்தவருடம், 88 குளங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாரி சௌபாக்கியா திட்டத்தின் கீழ் புணரமைக்கப்பட்டுள்ளன. அதுபோல் இவ்வருடம் 100 குளங்களைப் புணரமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் தேசிய பாடசாலைகளை தரமுயர்த்தியுள்ளோம்.

அரசியல் அதிகாரம் கடந்த காலங்களில் எமது கரங்களில் இருக்கவில்லை. கடந்த



நாடாளுமன்றத் தேர்தலில் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள மக்கள் சரியாகச் சிந்திருந்தால் ஆளும் கட்சியில் இன்னுமொருவரை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்திருக்கலாம். இதுபற்றி நாம் எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டும்.

இயற்கைப் பசளையை இவ்வருடம் விவசாயிகள் பயன்படுத்தியதனால் அறக்கொட்டி இம்முறை இல்லாமல் போயுள்ளது, புற்களின் தாக்கங்கள் குறைந்துள்ளது. அதாவது ஒரு ஏக்கருக்கு, 10 மூடைதான் விளைந்துள்ளது. ஆனால் விளைச்சல் குறைந்துள்ளது. ஆனால் ஒரு மூடை நெல் 6000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

ஆனால் தற்காலத்தில் மக்களுக்கு எதுவும் செய்யாமல் இருப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தரிவு செய்யப்படுகின்றார்கள். அனேகமாக மக்களுக்குச் சேவை செய்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுகின்றார்கள். வெறும்பேச்சை மாத்திரம் வைத்துக் கொண்டு அவர்கள் காலாகலத்திற்கு மக்கள் பிரதிநிதிகளாக வந்துவிடுகின்றார்கள். அனைவராலும் பேசமுடியும், அதற்காப்பால் நடைமுறைச் சாத்தியமான விடையங்கள் கஷ்ட்டமானதாகும். ஏதிர் கட்சி உறுப்பினராகப் பயணம் செய்வது இலகுவான விடையமாகும். ஆனால் ஆளும் கட்சியில் இருந்துகொண்டு வேலை செய்வதென்பது கடினமானவிடையமாகும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

லங்கா பொதுஜனப் பெரமுனவின் மட்டக்கப்பு மாவட்ட மகளிர் அணித்தலைவி திருமதி.ச.காந்தரூபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுனவின் மட்டக்கப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார், அக்கட்சியின் தலைமைக் காரியாலயத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய மகளின் ஒருங்கிணைப்பாளர் பாதிமா சிஹானா, உதவி ஒருங்கிணைப்பாளர் சிதம்பரம் லோஹிஷ்வரி, மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வருகைதந்த பெண்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தமை குறிப்பிட்டத்தக்கதாகும்.

# 65 மில்லியன் செலவில் பட்டிப்பளை பிரதேசத்திற்கு குடிநீர் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துவைத்தார் வியாழேந்திரன்!!





ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களின் ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இரண்டு பகுதிகளுக்கான குடிநீர் இணைப்பினை வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின், பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, முதலைக்குடா மற்றும் அம்பிளாந்துறை ஆகிய பகுதிகளுக்கான குடி நீர் வழங்கும் திட்டத்தினை பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆரம்பித்துவைத்துள்ளார்.

பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இவ்விரு கிராமங்களிலும் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக சுமார் 750 குடும்பங்கள் பயனடையவுள்ளதுடன், இதற்காக இராஜாங்க அமைச்சரின் சிபாரிசின் அடிப்படையில் சுமார் 65 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.புஸ்பலிங்கம், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திரமோகன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள்

உட்பட நீர் வழங்கல் அதிகார சபையின் அதிகாரிகள் ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள், மற்றும் பிரதேச வாசிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையின் இலக்கிய விழா!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை சர்வதேச மகளிர் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் எதிர்வரும் 2022 மார்ச் 8ம் திகதி மாவட்டம் தழுவியதான இலக்கிய நிகழ்வு ஒன்றினை நடாத்த திட்டமிட்டுள்ளது.

பேரவைத்தலைவர் ஜலீல் ஜீ தலைமையில் சம்மாந்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேரவையின் நிருவாக சபைக்கூட்டத்தில் மேற்படி முடிவு எட்டப்பட்டது என பேரவையின் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா தெரிவித்தார்.

அத் தீர்மானத்துக்கு இணங்க 16 வரிகள் கொண்டதான கவிதையை எதிர்வரும் 15 பெப்ரவரி 20 22 முன்னர் 'தேசபந்து ஜலீல் ஜீ சம்மாந்துறை.' எனும் விலாசத்துக்கோ அல்லது 076 355 2423 எனும் ' வாட்ஸ்அப்'இலக்கத்துக்கோ அனுப்பி வைக்கலாம்.

கவிஞர்களுடைய புகைப்படத்துடன் அக்கவிதை நூலுருப் பெறவுள்ளதுடன் பெருவிழாவின் போது அக்கவிதையை தாங்களே வாசித்து காண்பிப்பதற்கும் சந்தர்ப்பம் மேடையில் வழங்கப்படவிருக்கிறது. கவிதை எழுதிய அனைவருக்கும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

அந்நிகழ்வில் இவ்வருடத்துக்கான பெறுமதி வாய்ந்த ஆவணமாக 'சிறப்புக் கவிதை தொகுப்பு நூல்' ஒன்றினை மிகப்பிரமாண்டமான முறையில் வெளியிடவுள்ளதுடன் விருது வழங்கி கௌரவிக்கவும் இருக்கின்றது.

கீழ்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் கவிதை வடிக்கலாம்.

01. 'விடியல் தேடும் விட்டில்கள்'
02. 'அர்ப்பணிப்பில் உயர்ந்த ஆயிழை'
03. 'ஆணுக்குப் பெண் நாங்கள் அடிமையல்லோம்.'
04. 'மாதர்களை இழிவு செய்யும் மதியினர் ஒழிகவே! '

பெருவிழாவின் போதும் தெரிவுக்குழுவின் சிபாரிசுக்கு அமைவாக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஆளுமைகளில் சிலருக்கு 'மங்கையர் திலகம் 2022' எனும் விருது வழங்கி பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட இருப்பதும் சிறப்பம்சமாகும்.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தேரிவு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு 5.2.2022 சனிக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம் பெற்றது.

மேற்படி கூட்டத்தில் தலைவராக சைவப்புலவர் சி.கா.கமலநாதன் செயலாளராக சைவப்புலவர் செ.த.குமரன் தேர்வுச்செயலாளராக சைவப்புலவர் கந்தசத்தியதாசன் பொருளாளராக சைவப்புலவர் ச.முகுந்தன் உபதலைவர்களாக சைவப்புலவர் வ.தயாபரசிவம் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் சைவப்புலவர் திருமதிசிவானந்தஜோதி ஞானசூரியம் சைவப்புலவர் சா.பொன்னுத்துரை உபசெயலாளர்களாக சைவப்புலவர் செ.பரமேஸ்வரன் சைவப்புலவர் பொ.சந்திரவேல் உபதேர்வுச் செயலாளர்களாக சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி சைவப்புலவர் திருமதி லீலாவதி அருளையா பிரச்சாரச் செயலாளர்களாக சைவப்புலவர் திருமதி கவிதா கதிரமலை சைவப்புலவர் ஜீவன் பிரசான் சைவப்புலவர் பாலன் சுதாகரன் சைவப்புலவர் யோ.கஜேந்திரா சைவப்புலவர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் நிர்வாகசபை உறுப்பினர்களாக சைவப்புலவர் சி.நந்தகுமார் சைவப்புலவர் திருமதி ருத்திராதேவி பகீரதன் சைவப்புலவர் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் சைவப்புலவர் சு.சிவரூபன் சைவப்புலவர் சு.தேவமனோகரன் சைவப்புலவர் வ.உதயசங்கர் ஆகியோரும் பேசகராக சைவப்புலவர் செ.நவநீதகுமார் உள்ளகக் கணக்காய்வாளராக சைவப்புலவர் சி.நந்தகுமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கிழக்கு மாகாண போதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கலாநிதி கோபாலரத்தினம் பதவி யேற்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளராக. கலாநிதி மூ.கோபாலரத்தினம்(மூகோ) நேற்று (7) பதவி யேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

இலங்கை நிருவாக சேவை விசேட தர அதிகாரியான இவர், தற்போது கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராக கடமையாற்றிருந்தார்.அதற்குமுன்னர் திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருந்தார். மட்டக்களப்பு செட்டிபாளையத்தினை பிறப்பிடமாக கொண்ட இவர், மூத்ததம்பி செல்லம்மா தம்பதியினரின் புதல்வராவார். தற்போது கல்முனையில் வாழ்ந்துவருகிறார்.

1995 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக தெரிவுசெய்யப்பட்ட



இவர், தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரை செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். கலைமாணி பட்டத்தினை பேராதனை பல்கலைக் கழகத்திலும், பொதுநிருவாக துறையில் முதுமானிப் பட்டத்தினை இந்தியா பல்கலைக் கழகத்திலும் பெற்றார். இவர், தம்பலகாமம், ஏறாவூர் நகர் ,பட்டிப்பளை, கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், குச்சவெளி, நாவிதன்வெளி,திருக்கோயில் மற்றும் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப்பெற்றிருந்தார்.

கல்முனை லயன்ஸ்கழக தலைவராகவிருந்த லயன் கோபாலரெத்தினம், பல சமுகசேவைகளில் முன்னின்று சேவையாற்றிவருபவராவார். சிறந்த ஒருகலைஞரான இவர் பிரபல மேடைகளில் பழையபாடல்களைப்பாடி அசத்தியிருக்கிறார்.

# முஸ்லீம் அரசியல்வாதிகள் எங்களுடன் இணைந்து பயணிப்பதற்குத் தயாரில்லை என்ற விடயத்தை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன்

**(சுமன்)**

முஸ்லீம் அரசியல்வாதிகள் எங்களுடன் இணைந்து பயணிப்பதற்குத் தயாரில்லை என்ற விடயத்தைத் தான் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தங்களின் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு நாங்கள் எங்கள் மக்களைப் பாதுகாக்கக் கூடிய அடிப்படை நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

தனது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையைப் பொருத்தமட்டில் வடக்கு கிழக்கிலே தமிழர்கள் அதிகம் வாழுகின்றனர். மாகாணசபை அதிகாரங்கள் உருவாக்கப்படுகின்ற போது வடகிழக்கு இணைந்ததாகவே இருந்தது. அதனை அரசாங்கம் திட்டமிட்டு பிரித்திருக்;கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொருத்த மட்டில் நாங்கள் அடிப்படைக் கொள்கையில் இருந்து மாற முடியாது. இணைந்த வடகிழக்கு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்கின்ற விடயங்கள் நீண்டகாலமாகக் கடைப்படித்து வருகின்ற கொள்கையாகும். இந்தக் கொள்டிகைகளையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு வருகின் ஆவணங்களில்; எங்கள் தலைவர்கள் ஒப்பமிடுபவர்கள் அல்ல.

அந்த அடிப்படையிலே தான் இந்தியப் பிரதமருக்கான கடிதம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் வடகிழக்கு இணைப்பு என்ற விடயத்திலும், சமஷ்டி என்ற விடயத்தில் ஏனைய சில கட்சிகளும் வெளியேறிய விடயமும் யாவரும் அறிந்தவையே.

இந்த நிலைமையில் இன்று தமிழ் பேசும் இனம் என்ற ரீதியில் பலர் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மீசும் இனம் என்று சொல்லப்படுகின்ற போது அதில் தமிழர்கள் மாத்திரமல்லாமல் முஸ்லீம்களும் உள்ளடக்கப்படுகின்றர்கள். இந்த விடயத்தில் எம்மவர்களுக்கும் கூட புரிதல் வேண்டும்.




முஸ்லீம் அரசியல்வாதிகள் எங்களுடன் இணைந்து பயணிப்பதற்குத் தயாரில்லை என்ற விடயத்தைத் தான் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தங்களின் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு நாங்கள் எங்கள் மக்களைப் பாதுகாக்கக் கூடிய அடிப்படை நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத்தில் நாங்கள் தனித்துவமான எமது இனத்தின் விடுதலைக்காக, இருப்புக்காகச் செயற்பட வேண்டும்.

நம்மிடம் ஒற்றுமை என்று சொல்லிவிட்டு சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் அரச தரப்புக்குத் தாவி தாங்கள் சகல பலாபலன்களையும் அனுபவித்து வருகின்ற விடயங்கள் மாத்திரமல்ல அவர்கள் சந்தர்ப்பத்திற்கும், தங்கள் சமூகத்திற்கு ஏற்றால் போல் தொழில் வாய்ப்புகளையும், அபிவிருத்திகளையும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

தற்போதும் கூட அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதிகள் பாரபட்சமான முறையிலே கையாளப்படுகின்றது. அசாங்கம் சொல்லுகின்றது தாங்கள் கொண்டுவருகின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவாக இருந்து செயற்பட வேண்டும் என்று. நாங்கள் எந்த அபிவிருத்திக்கும் தடையானவர்கள் அல்ல. ஆனால், அரசாங்கம் ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டங்களையும் பாரபட்சமாகத் தமிழ் பிரதேசங்களைப் புறக்கணித்துவிட்டு முன்னெடுக்;கின்றது.

குறிப்பாக ஒருலெட்சம் வேலைவாய்ப்பில் கூட கிழக்கில்; தமிழர்கள் கூடுதலாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதிலும் அம்பாறை மாவட்டத்தில் அதிகமானவர்கள் புறக்கணிக்;க்ப்பட்டிருக்கின்றார்கள். அதே போன்று ஒருலெட்சம் கிலொமீட்டர் வீதி அபிவிருத்தியிலும் கூட தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்;கின்றன. இந்த அடிப்படையிலேதான் இந்த அரசாங்கம் செயற்படுகின்றது. இது உண்;மையிலே இந்த நாட்டில் ஒரு சிறந்த அரசியல் சூழலை ஏற்படுத்தக் கூடிய நிலைமை இல்லை என்பதைத் தான் காட்டி நிற்கின்றது.

அது மாத்திரமல்லாமல் தற்போது கொரோனாவினால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த சூழலில் அரசாங்கம் விடாப்பிடியான கொள்கையோடு செயற்படுவது இந்த மக்களை பட்டினிச் சாவை நோக்கிக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றது. அரசாங்கததின் இந்தக் கொள்கைகளில் மாற்றம் வேண்டும். ஏழை மக்களின் நாளாந்த விடயங்களை அறிந்த கொள்ள முடியாத தலைவர்களாக இந்த நாட்டின் தலைவர்கள் இருப்பதுதான் மிகவும் வேதனையான ஒரு விடயம் என்று தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டை நுளைவாயில் பாதைக்கு காபட் இட்டு புனரமைப்பு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டை நுளைவாயில் பாதை காபட் இட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் வேண்டுகோளுக்கிணங்க வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் கே. சிவகுமார் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு இப்பாதையினை காபட் இட்டு செப்பனிட பணிப்புரை விடுத்திருந்தார். இதற்கமைவாக இப்பாதை காபட் இடப்பட்டு செப்பனிப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.




மாவட்டத்தின் முக்கிய சுற்றுளாத் தளமாக இருக்கும் இவ்வொல்லாந்தர் கோட்டையினைப் பார்வையிட அதிகமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உள்ளாசப் பயனிகள் வருகைதருவதுடன் இங்கு மாவட்ட செயலகம் அமைந்திருப்பதனால் சேவைபெறவரும் பல பொதுமக்களும் அரச அதிகாரிகளும் இச்சேதமைந்த பாதையினைப் பயன்படுத்துவதில் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இதன் காரணமாக நீண்டகாலமாக சேதமடைந்திருத்த இப்பாதையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபர் கருணாகரன் விடுத்த வேண்டுகோளுக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபை மாகாணப் பணிப்பாளர் சிவகுமார் உடனடி நடவடிக்கை எடுத்மைக்கு அரசாங்க அதிபர் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

# மன்னாரில் தோடர்ந்து மின்காற்றாலைகள் நிறுவுவதை மக்கள் விரும்பாததால் பிரடிஜகள் குழுவை சந்தித்த நிறுவனத்திடம் எடுத்துரைப்பு

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் தீவை தொடர்ந்து மன்னார் பெரும் நிலப்பரப்பு பகுதியிலுள்ள நானாட்டான் பிரதேச செயலகத்துக்குரிய கிராமங்களிலும் மின் காற்றாடிகளை அமைப்பதற்கான பேச்சு வார்த்தையின்போது மன்னார் பிரடிஜகள் குழு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

மன்னார் தீவில் நடுக்குடா மற்றும் பேசாலையில் நிறுவப்பட்டுள்ள தலா 03 விசிறிகளைக் கொண்ட 36 மின் காற்றாடிகள் அமைக்கப்பட்டுள்ளதால் மன்னாரில் இவைகள் நிறுவப்பட்டுள்ளமையால் மன்னார் மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வேறு பலதரப்பட்ட காரணிகளால் மக்கள் அச்சத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது மன்னார் தீவின் தென்மேற்குக் கடற்கரையை அண்டிய அச்ச



ங்குளம் நறுவிலிக்குளம் மாதிரி கிராமம் உமனகரி மற்றும் பாசிக்குளம் ஆகிய மன்னார் பெரும்நிலப்பரப்பு பகுதியான நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராமங்களில் மின் காற்றாடிகள் நிறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அரசிடம் அனுமதி பெற்றுள்ள நிறுவனம் ஒன்று மன்னார் மறைமாவட்ட ஆயரை சந்தித்தபின் மன்னார் பிரடிஜகள் குழு ஆளுநர் சபையினரையும் சந்தித்து கலந்துரையாடியது.

தற்பொழுது ஏற்கனவே மக்களுக்கு சரியான விளக்கம் இல்லாத நிலையில் மன்னார் தீவில் நிறுவப்பட்ட மின் காற்றாலைகளால் மக்கள் தங்கள் வாழ்வாதரம் மற்றும் வேறு பல காரணிகளால் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் மன்னார் மக்கள் பாதிப்பகளுக்கு உள்ளாகுவதை மன்னார் மக்களின் வேண்டுதலுக்கு அமைய மன்னார் பிரடிஜகள் குழு விரும்பவில்லையென தங்கள் கருத்துக்களை விரிவாக அந்த நிறுவன குழுவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

# ஏறாவூர் பிரதேசத்தில் ஐந்து அபிவிருத்தித் திட்டங்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள்



**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

நாடளாவியில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் மக்கள் நலத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்2ஏ பிரதேசத்தில் ஐந்து அபிவிருத்தித்திட்டங்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள் சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றன.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. மோசேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆர்டிஎஸ். (RDS) பிரதிநிதிகள் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக, சமய முக்கியஸ்தர்கள் பலரும் பங்கேற்றனர்.

வீதி அபிவிருத்தி, வாழ்வாதார மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இன்னோரன்ன அபிவிருத்தித் திட்டங்கள் இதன் போது சம்பிரதாயபூர்வமாக ஆரம்பம் செய்யப்பட்டன.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் சிபாரிசின்பேரில் இத்திட்டத்திற்கென மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பத்துக்கோடி ரூபா நிதியும் நகர சபையின் வட்டார உறுப்பினர் ஏ. எஸ். எம். றியாலின் சிபாரிசின் பயனாக இப்பிரதேசத்திற்கு எழுபது இலட்சம் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுள்வேதவைத்தியசாலையில் அரசின் ஒருலட்சம் வேலைத்திட்டம் !





கிராமத்துடனான உரையாடல் ீ அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஒரு இலட்சம் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளை நாடு பூராகவுமுள்ள கிராமசேவகர் பிரிவுகள்தோறும் ஆரம்பிக்கும் நிகழ்வின் ஓரங்கமாக காரைதீவு ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி எம்.சி.எம்.காலிட் தலைமையில் சுற்றுமதில் அமைப்பிற்கு பிரதேசசெயலக காணிஉத்தியோகத்தர் இரா.ரமேஸ் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அடிக்கல்நடும் நிகழ்வின்போது

(படங்கள்: காரைதீவு சகா)





# இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பொது பட்டமளிப்பு விழா






















**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பொது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக திங்கட்கிழமை(7) ஆரம்பமாகியது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் தலைமையில் நேற்று (7)சம்பிரதாய பூர்வ ஆலவட்ட நிகழ்வுடன் ஊர்வலமாக ஆரம்பமாகியுள்ள பட்டமளிப்பு நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை(10) ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதன்படி நான்கு நாட்களுக்கு பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் எட்டு அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் இந்த பொதுப்பட்டமளிப்பு விழாவில் மொத்தமான 2621 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

1 ஆம் அமர்வில் பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் பீடத்தினைச் சேர்ந்த 4%5 பேரும் 2 ஆம் அமர்வில் கலைப்பீடத்தினைச் சேர்ந்த 219 பேரும், 3 ஆம் அமர்வில் கலைப்பீடத்தினைச் சேர்ந்த 348 பேரும், 4 ஆம் அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 329 பெரும், 5 ஆம் அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தினைச் சேர்ந்த



313 பேரும், 6ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 2%% பேரும் % ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 348 பேரும்இ 8 ஆம் அமர்வில் கலை, கலாச்சார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

அத்துடன், 4 பேர் முதுதத்துவமானிப் பட்டங்களையும், 23 பேர்வியாபார நிருவாக முதுமானிப்பட்டங்களையும், 2 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினையும் பெறவுள்ளனர்.

இதேவேளை இப்பொதுப்பட்டமளிப்பு விழாவில், பேராதனை பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ்.தில்லை நாதன், தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் ஜௌபர் சாதிக் ஆகிய இருவருக்கும் கௌரவ கலாநிதிப்பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. விழாவில் முதல் நாள் நிகழ்வில் இணையவழி ஊடாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஏனைய அதிதிகளான உயர்நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, றுகுணு பல்கலைக்கழக பேராசிரியர் காமினி சேனனாயக்க (முன்னாள் உபவேந்தர்) ஆகியோரின் சிறப்புரைகளும் அடுத்த நாள் நிகழ்வுகளில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் விழாவிற்கு வருகை தரும் பட்டம்பெறும் மாணவர்கள் குறைந்த அளவு குடும்ப உறுப்பினர்களுடன் வருகை தருமாறும்,

அனுமதி அட்டை, கொவிட் தடுப்பூசி அட்டை என்பவற்றுடன் வருகைதருவோர் மட்டுமே பட்டமளிப்பு விழாவளாகத்திற்குள் அனுமதிக்கப்படுவரெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரத்தினை சுயலாப அரசியலுக்காக பயன்படுத்துவதனை கைவிட வேண்டும்

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர்கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள சர்ச்சை குறித்து சுயாதீனமான முறையில் பக்கசார்பின்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இரா.சாணக்கியனின் பெயரை பயன்படுத்தி குறித்த விடயம் தொடர்பாக பகிரப்பட்டு வரும் கருத்துக்கள் குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள ‘ஹபாயா’ சர்ச்சை பற்றிய உண்மைத் தன்மை குறித்து சரிவர தெரியாமையினாலேயே நான் அது குறித்து இது வரை பேசாமல் இருந்தேன்.



எனினும் எனது பெயரினை பயன்படுத்தி சில விசமிகள் இனங்களுக்கிடையில் பிரிவினையினை வெளியிடும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதன்காரணமாகவே நான் தற்போது இதுகுறித்து சில கருத்துக்களை வெளியிட விரும்புகின்றேன்.

இது குறித்து சுயாதீனமான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன், பெரும் சர்ச்சையாகியுள்ள ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரத்தினை சுயலாப அரசியலுக்காக பயன்படுத்துவதனை கைவிட வேண்டும்.

இவ்வாறான பிரச்சனைகள் இரு சமூக இணைப்பாட்டுடன் தீர விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.’ எனத்தெரித்துள்ளார்.

# 40 ஆயிரம் வில்லைகள் போதியிடும் பைக்கற்றுக்களை வைத்தியசாலைக்கு வழங்கி வைப்பு





**(வி.சுகிர்தகுமார் )**

ஆலயங்கள் சமய பணிகளில் மட்டுமல்லாது சமூக பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

இதற்கமைவாக பனங்காடு பட்டிநகர் ஸ்ரீ கண்ணகிஅம்மன் ஆலய நிருவாகமும் சமூகப்பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலை மற்றும் பனங்காடு பிரதேச வைத்தியசாலைகளுக்கு தேவையான 40 ஆயிரம் வில்லைகள் பொதியிடும் பைக்கற்றுக்களை இன்று வழங்கி வைத்தனர்.

ஆலயத்தின் தலைவரும் வண்ணக்கருமான க.கார்த்திகேசு தலைமையில் இடம்பெற்ற வில்லை பொதியிடும் பைக்கற்றுகள் வழங்கும் நிகழ்வில் ஆலய பொருளாளர் கே.பி.ராஜஸ்ரீ உள்ளிட்டவர்களும் இணைந்து கொண்டனர். குறித்த பொதிகளை இரு வைத்தியசாலைகளுக்கும் கொண்டு சென்ற ஆலய வண்ணக்கர் உள்ளிட்ட நிருவாகம் வைத்தியசாலை நிருவாகத்திடம் கையளித்தனர். இதனை பெற்றுக்கொண்ட வைத்தியசாலை நிருவாகம் ஆலய நிருவாகத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

# கோவிட் 19 தோற்றுக்குள்ளாகிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பரீட்சாத்திகளுக்கு விசேட நிலையங்களில் பரீட்சை

**(இ.சுதாகரன்)**



நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பரீட்சாத்திகளுக்கு விசேடமாக பரீட்சை நிலையங்களை அமைக்கப்பட்டுள்ளதாககிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட பரீட்சாத்திகளுக்கு பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையிலும் ,கல்முனை கல்வி வலய பரீட்சாத்திகளுக்கு அட்டாளைச்சேனை அயுர்வேத வைத்தி சாலையிலும், அம்பாறை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையிலும் ,திருகோணமலை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு குச்சவெளியிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலையிலும் பரீட்சையினை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் மாணவர்களின் நலன் கருதி பரீட்சை ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைவாக இவ்வாறு விசேட நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமிய தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்ட நிறைவு விழா

‘இலங்கை சமூக அமைப்புகளிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமிய தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்’ என்னும் நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான நிறைவு விழா அண்மையில் மட்டக்களப்பு றிவேரா சுற்றுலா விடுதியில் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜாவின் தலைமையில் நடைபெற்றது.

ஜேர்மன் ஹோப்ரேசன் மற்றும் பிளேன் இன்டநெசனல் நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பில் பெரண்டினா அபிவிருத்திச்சேவை நிறுவனத்தால் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.





இத்திட்டத்துடன், இணைந்து கடந்து மூன்று வருடங்களாக பணியாற்றிய உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர் என்.நவேஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக கோரளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலாளர் எந்திரி ஜீ.அருணனும் கலந்து கொண்டார். பெரண்டினா அபிவிருத்திச் சேவை நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட இவ் நிகழ்ச்சித்திட்டத்துடன், கடந்த 3 வருடங்களாக இணைந்து செயற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் உள்ளிட்ட பலரும் இந்த விழாவில் பங்கு கொண்டனர்.

இதன்போது, நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடு அதன் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்கள் குறித்த விளக்கமளிப்பு நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜாவால் மேற்கொள்ளப்பட்டதுடன், திட்டம் தொடர்பான கருத்துக்கள் பெறப்பட்டதுடன், ஆலோசனைகளும் சேகரிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று, கோரளைபற்று மத்தி, கோரளைப்பற்று தெற்கு ஏறாவூர்பற்று, கோரளைப்பற்று வடக்கு, ஏறாவூர்பற்று உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிராமிய அமைப்புகளைப் பலப்படுத்துதல், தொழில்நுட்பத்திறன்களை விருத்தி செய்தல், தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கல், பயிற்சி நெறிகள் ஊடாக உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் ‘இலங்கை சமூக அமைப்புகளிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமிய தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்’ நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.







# விபுலானந்தா சிறுவர் இல்ல மாணவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சிகை அலங்கார ஒப்பனை

**(வி.சுகிர்தகுமார்)**



74ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று முற்போக்கு அபிவிருத்தி சங்க உறுப்பினர்களால் அக்கரைப்பற்று விபுலானந்தா சிறுவர் இல்ல மாணவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சிகை அலங்கார ஒப்பனை மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பின் அம்பாரை மாவட்ட செயற்பாட்டாளர் செல்வம் உதயகுமார் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் இல்லத்தின் ஸ்தாபகர் இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளை உள்ளிட்ட இயக்குனர்சபை உறுப்பினர்கள் மேற்பார்வை செய்தனர்.

இதே நேரம் இல்லத்தின் ஸ்தாபகர் இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளையின் வேண்டுகோளுக்கமைய எதிர்காலத்திலும் அக்கரைப்பற்று முற்போக்கு அபிவிருத்தி சங்கத்தினால் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இப்பணியில் இணைந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் தங்களுடன் இணைந்து செயற்படலாம் எனவும் கூறப்பட்டது.

குறித்த மனிதாபிமான பணியை முன்னெடுத்த அக்கரைப்பற்று முற்போக்கு அபிவிருத்தி சங்கத்திற்கு இல்லத்தின் ஸ்தாபகர் நன்றியை தெரிவித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இனவாத செயற்பாடுகள் இலங்கையில் தலை விரித்தாடுகின்றன

## இனவாதத்திற்கு இடமில்லை என்கிறார் ஜனாதிபதி



ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையின்போது தனது ஆட்சியில் இனவாதத்திற்கு இடமில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து வரவேற்கத்தக்கது. ஆனால் அவரது ஆட்சியில் இனவாத செயற்பாடுகள் பேச்சுகள் தலைவிரித்தாடுவதை அவர் கண்டு கொள்ளாதுதான் ஆச்சரியமாகவுள்ளது. அதுவும் ஆசியாவின் ஆச்சரியமாகத் தான்படுகிறது.

தமிழ் மொழி,சிங்கள மொழிகளில் ஏற்கனவே பாடப்பட்ட தேசியகீதம் இப்போது சிங்கள மொழியில் மட்டும் பாடப்படுகிறது.விசேடமான நிகழ்வுகளில் இதனைப் பார்க்க முடிகிறது.அதே வேளை ஏற்கனவே காணப்பட்ட இந்துக்கலாசார,இஸ்மிய விவகார,கிறிஸ்தவ விவகார அமைச்சுகள் இல்லாமல் செய்யப்பட்டு பௌத்தசாசன அமைச்சு மாத்திரம் பிரதமரிடம் உள்ளது. மேலும், தொல்லியல் ஆணைக்குழுவில் சிங்கள பௌத்தர்கள் மாத்திரம் இடம் பெற்றுள்ளனர்.

அடிப்படைச் சிங்கள பௌத்த வாதத்தைக் கொப்பளித்துவரும் ஞானசாரதேரர் தலைமையில் ஒரே நாடு ஒரே சட்டம் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.சாதாரண சிறிய விடயங்களுக்குக்கூட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பல மாதங்கள்,பல வருடங்களாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை மரண தண்டனை,ஆயுட் கால சிறைத்தண்டனை வழங்கப்பட்ட சிக்களச்சிறைக்கைதிகள் பலர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் மூலமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். ருவான்வெலிசாயவில் பதவியேற்ற ஜனாதிபதி தான்,சிங்கள பௌத்தர்களால் தெரிவு செய்யப்பட்டதாகப் பல தடவைகள் கூறியுள்ளார்.ஆனால் அவரது வெற்றியைத் தீர்மானித்த தமிழ், முஸ்லிம் வாக்குகள் சுமார் ஏழு இலட்சங்கள் பற்றி அவர் பேசுவதில்லை. அந்த ஏழு இலட்சம் வாக்குகளும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட சஜித்திற்கு அளிக்கபப்பட்டிருந்தால் அவர் வென்றிருப்பார் என்பதை ஜனாதிபதி கருத்திற் கொள்வதில்லை.தொல்லியல் இடங்கள் என்ற போர்வையில் தமிழர்கள், முஸ்லிம்களின் கலாசாரப்பூமிகள் தொல்லியல் ஆணைக்குழுவால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் மேய்ச்சல் தரைகள்,காணிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.தமிழர்களின் பிரச்சினை சேறும் தண்ணியும்தான் என்று அமைச்சர் மகிந்தானந்த கூறியுள்ளார்.காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணைத் தோண்டிப் பார்க்குமாறு அமைச்சர் விமல்வீரவன்ச கூறியுள்ளார். தமிழர்களின் பிரச்சினை அபிவிருத்தி மட்டுமே என்று ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் கூறுகின்றார்கள். கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தமிழ்பேசும் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.திரைமறைவில் சிங்கள பௌத்தக் குடியரசு ஒன்றினை அமைப்பதற்கான அரசியல் யாப்பு வரையப்பட்டு வருவதாகச் சந்தேகம் எழுப்பப்படுகிறது. இப்படியாக இந்த அரசாங்கம் சிங்கள பௌத்த அடிப்படைவாதத்தினை மூலதனமாக,முதலீடுகளாகக்ன கொண்டு செயற்படுகின்றது. இப்படியெல்லாம் யதார்த்தங்கள் இருக்க,தமது ஆட்சியில் இனவாதத்திற்கு இடமில்லை என்று ஜனாதிபதி கூறுவது உள்நாட்டு மக்களை மட்டுமல்ல, உலகத்தையே ஏமாற்றும் செயலாக உள்ளது.



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர், மட்டக்களப்பு


இன்னுமொருவகையில் நோக்கினால் சிங்கள பௌத்தர்கள் இனவாத மதவாகயதரீதியாகச் செயற்பட இடமுண்டு.தமிழர்கள்,முஸ்லிங்கள், இந்துக்கள்,கிறிஸ்தவர்கள் தமது இனத்துவம்,மதத்துவம் சார்ந்து செயற்பட முடியாது என்பதுதான் ஆட்சியாளர்களின் வியாக்கியானமாக அமைந்துள்ளது. அப்படியானால் பல்லிமைக்கள் ஒற்றையாட்சி முறையின் கீழ் சமத்துவமாக சமவுரிமைகளுடன் வாழ முடியாது என்பதுதான் 74 வருட கால சிங்கள பௌத்த அடிப்படைவாத வரலாறாகவுள்ளது.பல்லின மக்கள் சுயநிருணய உரிமையுடன் சமஷ்டி அரசியல் யாப்பின்கீழ் ஆளப்பட வேண்டியதுதான் இதற்கான ஒரே தீர்வாக உள்ளது. ஆயின் ஒற்றையாட்சிமுறை சமூக பொருளாதார அரசியல் கலாசார ரீதியாகப்பாரிய தோல்வியினை அடைந்துள்ளது எனபதுதான் வரலாற்று ஆய்வின் முடிந்த முடிவாகும்.ஆனால் ஆட்சியாளர்கள் இதனை கடைசிவரை உணரவே மாட்டார்கள்.சர்வதேசம் இங்கை ஆட்சியார்களுக்கு உணர்த் வேண்டிய காலம் கனிந்துள்ளது என்பதுதான் உண்மையாகும்.

“சிங்கள பௌத்தர்கள் இனவாத மதவாகயதரீதியாகச் செயற்பட இடமுண்டு.தமிழர்கள்,முஸ்லிங்கள், இந்துக்கள்,கிறிஸ்தவர்கள் தமது இனத்துவம்,மதத்துவம் சார்ந்து செயற்பட முடியாது என்பதுதான் ஆட்சியாளர்களின் வியாக்கியானமாக அமைந்துள்ளது. அப்படியானால் பல்லிமைக்கள் ஒற்றையாட்சி முறையின் கீழ் சமத்துவமாக சமவுரிமைகளுடன் வாழ முடியாது என்பதுதான் 74 வருட கால சிங்கள பௌத்த அடிப்படைவாத வரலாறாகவுள்ளது.பல்லின மக்கள் சுயநிருணய உரிமையுடன் சமஷ்டி அரசியல் யாப்பின் கீழ் ஆளப்பட வேண்டியதுதான் இதற்கான ஒரே தீர்வாக உள்ளது. ஆயின் ஒற்றையாட்சிமுறை சமூக பொருளாதார அரசியல் கலாசார ரீதியாகப்பாரிய தோல்வியினை அடைந்துள்ளது எனபதுதான் வரலாற்று ஆய்வின் முடிந்த முடிவாகும்.ஆனால் ஆட்சியாளர்கள் இதனை கடைசிவரை உணரவே மாட்டார்கள். சர்வதேசம் இங்கை ஆட்சியார்களுக்கு உணர்த் வேண்டிய காலம் கனிந்துள்ளது என்பதுதான் உண்மையாகும்.”

# நீண்ட நேரம் கடுமையாக இருமல் இருந்தால் சைனஸ் தோற்று தான்

## அஸ்தம்பட்டி சேலம் தமிழ்நாடு ஆதி அகத்தியர் சித்த வைத்தியசாலை வைத்தியர் கோ.பிரியா விளக்குகிறார்






### மூக்கடைப்பு நோய் (சைனஸ்) பிரச்சனை என்றால் என்ன?

மூக்கைச் சுற்றி நான்கு ஜோடி காற்றுப் பைகள் உள்ளது. இதற்கு மூக்கடைப்பு, சைனஸ், பீனிசம், நீர்க்கோவை, மூக்கு நீர் பாய்தல், சளி என பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் காற்றை தேவையானளவு வெப்பத்தில் நுரையீரலுக்குள் அனுப்பும் முக்கியமான வேலையை இந்த சைனஸ் காற்றுப் பைகள் செய்கின்றன. அதாவது, 'மியூகஸ் மெம்பரேன்' எனும் சளிச் சவ்வு மூக்கினுள் இருக்கின்றது. இது சைனஸ் திரவத்தை ஈரப்படுத்திக்கொண்டே இருக்கும். இதன் ஊடாக வெளிக்காற்று வெப்பத்துடன் நுழைந்தாலும், அதை தேவையான அளவு வெப்பத்தில் ஈரப்படுத்தி நுரையீரலுக்குள் அனுப்பிவிடும். இந்த சைனஸ் அறைகளின் திரவ வடிகால்கள் அடைபட்டு அங்கு திரவம் தேங்கும்போது மூக்கடைப்பு நோய் சைனஸ் (Sinusitis) பிரச்சினை ஏற்படுகிறது.

இன்று ஏராளமானோருக்கு சளி (சைனஸ்) பிரச்சனை உள்ளது. இப்பிரச்சனையால் ஏராளமான மக்கள் ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்பட்டு வருகிறனர். ஆனால் பலருக்கும் இருப்பது சளி என்று சரியாகத் தெரிவதில்லை. பொதுவாக சளிப் பிரச்சனையை, சாதாரண சளி என்று சரியாக கவனிக்காமல் விட்டுவிடுவார்கள். இதனால் சளி சுரப்பி அல்லது சுவாசப் பாதையில் அழற்சி மற்றும் வீக்கமடைந்து சுவாசிப்பதில் சிக்கல் நிலையும் ஏற்பட்டுவிடும். மேலும், உடல் ஆரோக்கியம் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகுவதுடன், சில சமயங்களில் காது கேட்கும்திறன், பார்வைப் பிரச்சனைகள் போன்றவற்றை சந்திக்கவும் நேரிடலாம்.

ஒருவருக்கு சாதாரண சளி என்றால் ஒரு வாரத்தில் குணமாகிவிடும். ஒரு வாரம் கடந்தும் சளி சரியாகாவிட்டால், அவர்களுக்கு சைனஸ் சுரப்பியில் அழற்சி ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிந்திருப்பது மிக அவசியமாகும்.

### அதன் அறிகுறிகள் என்ன?

அடிக்கடி தும்மல், மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு, தலைவலி போன்றவை சைனஸ் பாதிப்பின் பொதுவான அறிகுறிகளாகும். கண்ணுக்குக் கீழே, கன்னம், முன்நெற்றி ஆகிய இடங்களைத் தொட்டால் வலி ஏற்படுதல், தலையைக் குனிந்தால் தலைப்பாரம் அதிகரிக்கும், காய்ச்சல், தொண்டையில் சளி கட்டல், இரவு நேரங்களில் கடுமையான இருமல், உடற்சோர்வு, மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் கட்டியான மூக்குச் சளி வெளியேறல், சளியில் துர்நாற்றம் வீசும், வாசனை தெரியாது, ருசியை உணர முடியாது, வாய் துர்நாற்றம், காது அடைப்பு, பல் வலி போன்ற அறிகுறிகள் தோன்றும்.

### இவை பற்றி தெளிவாக குறிப்பிட முடியுமா?

முகத்தில் வலி ஒருவருக்கு சைனஸ் பிரச்சனை இருந்தால் முகத்தில் வலியை சந்திக்க நேரிடும். அதுவும் மூக்கைச் சுற்றியுள்ள பகுதியில்தான் வலியை அனுபவிக்கக்கூடும். அத்தோடு மேல் தாடை மற்றும் தாடைகள் இணையும் பகுதிகளிலும் வலியை சந்திக்க நேரிடும். தேவையில்லாத அழுத்தம் அல்லது பாரம் முகத்தில் கொடுப்பது போன்ற உணர்வு எழும். ஒருவேளை சளி பிரச்சனைகளுக்கு மருந்து எடுத்தாலும் இந்த வலியில் இருந்து விடுபட முடியாது. இன்னும் சில சமயங்களில்





தலையை திருப்பினால் கூட வலி மற்றும் அழுத்தத்தை அனுபவிக்கக்கூடும்.

மஞ்சள் நிற சளி வெளியேற்றம் சாதாரண சளி பிடித்திருந்தால் மூக்கிலிருந்து நிறமற்ற சளி வெளியேறும். அதுவே சைனஸ் பிரச்சனையாக இருப்பின் மூக்கில் இருந்து சளி மஞ்சள் நிறத்திலோ அல்லது பச்சை நிறத்திலேயோ வெளியேறும். இதேபோன்று வாயின் வழியாகவும் சளி வெளியேறும். இதற்குக் காரணம் சைனஸ் வைரஸாகும். சுவாசிக்கும் போது, நாசித் துளைகளில் சற்று வலியையும் சந்திக்கக்கூடும்.

கடுமையான இருமல் நீண்ட நேரம் கடுமையாக இருமல் இருந்தால் சைனஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம். குறிப்பாக இரவு நேரத்தில் இருமல் வருவதோடு, தூங்கும் நிலையும் பாதிக்கும். அதுவும் ஒருவர் மல்லாக்க படுக்கும்போது நாசித்துளையில் உள்ள சளி அப்படியே மீண்டும் தொண்டைக்கு சென்றுவிடும். இதனால் இரவு நேரத்தில் கடுமையான வறட்டு இருமலை சந்திக்க நேரிடுகிறது. இம்மாதிரியான நிலையில் தலையை சற்று உயரமாக வைத்துக் கொண்டு ஒரு பக்கமாக தூங்கவேண்டும்.

வாய் துர்நாற்றம் ஒருவருக்கு சைனஸ் தொற்றுக்கள் இருந்தால் அவரது வாய் கடுமையான துர்நாற்றத்துடன் இருக்கும். பொதுவாக வாய் துர்நாற்றத்திற்கான பாக்டீரியாக்கள் உள்நாகில் வளர்ச்சி பெறுகிறது. இதனால் வாயினுள் துர்நாற்றம் வீசுகிறது. சைனஸ் இருக்கும் போது மூக்கைச் சுற்றி பாக்டீரியாக்கள் நிறைந்த சளி தேங்குவதால் கடுமையான துர்நாற்றத்தை உண்டாக்குகிறது. இதற்கு என்னதான் வாயை சுத்தமாக வைத்துக் கொள்ள பற்களைத் துலக்கினாலும் அந்தத் துர்நாற்றம் நீங்காது.

காது அடைப்பு காதுகளுக்கும், சைனஸ் பிரச்சனைக்கும் தொடர்புள்ளது. சைனஸ் பிரச்சனை உள்ளவர்களுக்கு காதுப் பிரச்சனைகள் வரும் அபாயம் அதிகரிக்கும். அதுவும் காது மடல் இருந்து வலி ஆரம்பித்து, பின் காதுகளுக்குள் வலி தீவிரமாகத் தொடங்கும்.

பல் வலி சைனஸ் பிரச்சனைக்கும், பல் வலிக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் சைனஸ் இருந்தால், அடிக்கடி பல் வலியை சந்திக்கக்கூடும். சைனஸ் சுரப்பியில் அதிக அழுத்தம் ஏற்படும்போது, தாடையின் மேல் பகுதியில் அதிக அழுத்தம் கொடுக்கப்படும். இதனாலேயே பல் வலி ஏற்படக் காரணமாக அமைகின்றது. இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டால், வைத்தியரைச் சந்தித்து அதற்கான மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சைனஸினால் ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

சைனஸ் பிரச்சனைகளில் இருந்து விடுபட ஏராளமான இயற்கை வைத்தியங்கள் உள்ளது. அவற்றில் சில எளிய இயற்கை வைத்தியங்களை நாமே செய்து கொள்ளவதன் மூலம் சைனஸ் பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம். அதற்கு முன்னர் சைனஸ் பற்றிய தெளிவும், அதனால் ஏற்படுகின்ற அறிகுறிகள் பற்றியும் நாம் அறிந்திருப்பது மிக மிக அவசியமாகும்.

### மூக்கடைப்பு நோய் எதனால் ஏற்படுகிறது?

ஆரோக்கியக் குறைவு, சுற்றுச்சூழல் மாசு, ஒவ்வாமை இந்த மூன்றும்தான் சைனஸ் பிரச்சினைக்கு முக்கியக் காரணங்களாகும். குறிப்பாக பாக்டீரியா, வைரஸ், பூஞ்சைத் தொற்றுகள் மூலமாகச் சளி பிடிக்கும்போது சைனஸ் பிரச்சனை ஏற்படுகின்றது. மேலும், மாசடைந்த காற்றில் கலந்துவரும் தொற்றுக்கிருமிகள் சைனஸ் அறைக்குள் புகுந்துவிடும்போது, முக்கினுள் இருக்கும் 'சளி சவ்வு'வீங்கி அழற்சி ஏற்படும். இதனால் அளவுக்கு அதிகமாக நிணநீர் திரவம் சுரந்து மூக்கு வழியாக வெளியேறும்.

காய்ச்சல், தூசு, புகை, வாசனைத் திரவியம் காரணமாக ஒவ்வாமை ஏற்பட்டால், மிகவும் குளிர்ச்சியான உணவுப் பொருட்களை சாப்பிட்டால், பனியில் நடந்தால், மழையில் நீண்ட நேரம் நனைந்தால், சைனஸ் அறையில் அழற்சி அதிகரிக்கும்போதும், மூக்கில் சதை வளரும்போதும் நீர் வெளியேற முடியாதளவுக்கு மூக்கு அடைத்துக்கொள்ளும்.



நேர்காணல் :-
பைஷல் இஸ்மாயில்

### மூக்கடைப்பு நோய் ஏற்படாமலிருக்க என்ன செய்யவேண்டும்?

சுயசுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம் பேணுவதன் மூலம் கிருமித் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். சமச்சீரான உணவுகளை எடுத்தல், காய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் இருந்து விடுபடல், காய்சல் உள்ளவர்களுடன் இருப்பதை தவிர்த்தல், ஒவ்வாமை உணவுப் பொருளைத் எடுக்காமல் இருத்தல், தூசு, புகைக்கு ஒவ்வாமை உள்ளவர்கள் வாகனத்தில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து கொள்ளல், தேவையான அளவுக்கு நீர் குடித்தல், ஐஸ், ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான உணவுப் பதார்த்தங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

மிக முக்கியமாக, குளிர்பானங்களைக் குடிக்கவே கூடாது, பனியில் அலையக் கூடாது, புகைபிடிக்கக் கூடாது, புகையுள்ள இடங்களில் வசிக்கக் கூடாது, மூக்குப்பொடி போடக்கூடாது, அசுத்தமான நீர் நிலைகளில் குளிக்கக் கூடாது, மூக்கைப் பலமாகச் சிந்தக் கூடாது, விரல்களால் அடிக்கடி மூக்கைக் குடையக் கூடாது, மூக்கடைப்பைப் போக்கும் இன்ஹேலரை அடிக்கடி பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து கட்டாயமாக தவிர்ந்திருப்பது மிக முக்கியமானதாகும்.



### இதுதொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

இந்தப் பிரச்சினைக்கு ஒவ்வாமைதான் மிக முக்கிய காரணியாக இருப்பதால், ஒவ்வாமையை ஏற்படுத்தும் விடயங்களில் இருந்து தவிர்ந்து நடத்தல் வேண்டும். சைனஸ் பாதிப்பு ஏற்பட்டால் கொதிக்க வைத்த சுடுநீரில் ஒரு துணியை நனைத்து அதிகப்படியான நீரைப் பிழிந்து அந்தத் துணியால் நெற்றி, மூக்கு, கண்கள் போன்ற இடங்களில் ஒத்தடம் கொடுக்கவேண்டும். இவ்வாறு 15 நிமிடத்திற்கு ஒருமுறை என ஒரு நாளைக்கு மூன்று தடவை செய்தால், மூக்கு பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரித்து சைனஸ் சுரப்பியில் உள்ள அடைப்புக்கள் திறக்கப்படும்.

நன்கு கொதிக்க வைத்த நீருடன் சிறிது வேப்பிலை அல்லது வெந்தயத்தைப் போட்டு ஆவி பிடிக்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் சைனஸால் ஏற்படும் தலைவலி, மூக்கடைப்பு போன்ற பிரச்சனைகளில் இருந்து உடனடியாக விடுபடலாம். நீரில் வேப்பிலை, வெந்தயம் போன்றவற்றை சேர்ப்பதால் அதிலுள்ள அன்டி பக்றீரியா, சைனஸ் சுரப்பிகளில் உள்ள தொற்றுக்கள் போன்றவற்றை அழிக்க உதவுகின்றது. அதுமாத்திரமல்லாமல் சளி இளகி எளிதில் வெளியே வந்துவிடும்.

வெள்ளைப் பூண்டில் அன்டி பக்றீரியல் மற்றும் பூஞ்சை எதிர்ப்புத் தன்மைகள் உள்ளது. எனவே சைனஸ் பிரச்சனை உள்ள ஒருவர் வெள்ளைப் பூண்டு பற்களை நீரிலிட்டு கொதிக்க வைத்து அந்நீரைக் குடிக்கலாம். இதனால் உடனடி நிவாரணம் கிடைக்கும். தேசி இலைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து அந்நீரில் ஆவி பிடிக்க வேண்டும். இதனால் அதில் உள்ள மருத்துவப் பயன்கள் சைனஸ் சுரப்பிகளில் உள்ள தொற்றுக்களை அழித்து, சைனஸ் பிரச்சனையில் இருந்து விடுவிக்கும். தேசி இலைகளைப் போட்டு கொதிக்க வைத்த நீரால் தினமும் 2 முறை வாயைக் கொப்பளித்தாலும் சைனஸில் இருந்து விடுபடலாம்.

குறிப்பாக காலையிலும், இரவிலும் நீராவி பிடிப்பது நல்லது. இதனால் மூக்கில் உள்ள சளி இளகிச்சுலபமாக வெளியேறிவிடும். தொற்றுக் கிருமிகள் இருப்பதாகத் தெரிந்தால் வைத்தியரின் ஆலோசனைகளுக்கமைவாக தகுந்த மருந்துகளை எடுத்துக்கொள்வது சிறந்தது.

# தமிழரின் இனப்பரம்பலைக் குறைக்க கிழக்கில் எடுத்த முன்னெடுப்புகளை வடக்கிலும் தீவிரப்படுத்துகின்றது அரசாங்கம்

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன்



(சுமன்)

கிழக்கில் அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் பெரும்பான்;மை அரசாங்கம் எவ்வாறான முறையில் இனப்பரம்பலை மாற்றி தமிழர்களின் ஆதிக்கத்தைக் குறைத்ததோ அதே தற்போது வடக்கிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவரும், கோரளைப்பற்று பிரதேசசபை உறுப்பினருமான கி.சேயோன் தெரிவித்தார்.

இலங்கைகத் தமிழ் அரசுக் கட்சியின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் இரண்டு நாட்கள் வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டு அங்கு இடம்பெறுகின்ற மீன்வர்களின் போராட்டம், குருந்தூர்மலைக்கான களவியம் போன்றனவற்றில் கலந்துகொண்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கைப் போன்றே வடக்கிலும் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் தொல்லியல் என்ற பெயரில் கைப்பற்றப்பட்டு பௌத்த மயமாக்கல் செய்யப்படுகின்றது. கிழக்கில் அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் பெரும்பான்;மை அரசாங்கம் எவ்வாறான முறையில் இனப்பரம்பலை மாற்றி தமிழர்களின் ஆதிக்கத்தைக் குறைத்ததோ அதே வழிமுறைகள் தற்போது வடக்கிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எம்மத்தியில் பல பிரச்சனைகள் இருக்கையில் வெறுமனே பொருளாதாரப் பிரச்சனையை மாத்திரம் திணிக்க முற்படுகின்றனர் இந்த அரசாங்கமும், அதற்கு வால்பிடிக்கும் அரசியல்வாதிகளும். இதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்காக பொருளாதார அபிவிருத்தி தேவையற்றது என்ற நாங்கள் சொல்லவில்லை. ஆனால் எங்கள் வளங்களை கையகப்படுத்தி, எமது இனப்பரம்பலை மாற்றி அதனூடாகப் போடப்படும் பொருளாதார அபிவிருத்தி என்கின்ற எலும்புத்துண்டுகளை நாங்கள் ஏற்க முடியாது.

எமது மக்களின் உரிமை, அபிவிருத்தி சார்;ந்த அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நிரந்தரத் தீர்வாகவே நாங்கள் சமஷ்டியைக் கோருகின்றோம். அந்தத் தீர்வு எமக்கு முழுமையாகக் கிடைக்கும் பட்சத்தில் எமக்கான பொருளாதாரத்தை நாமே உருவாக்க முடியும். எமது மக்களையும் பொருளாதாரப் பிரச்சனைகளில் இருந்து நிரந்தரமாக மீட்சி பெறச் செய்ய முடியும். அதை விடுத்து தற்போது இவர்கள் சொல்லும் பொருளாதாரமானது எமது மக்களுக்கென்று வழங்கப்பட்டாலும் அது பெரும்பான்மை சமூகத்தை மையப்படுத்தியதாகவே இருக்கும்.

இன்று நமது நாட்டின் சுதந்திர தினம். ஆனால், பல வழிகளிலும் சுதந்திரம் மறுக்கப்பட்ட இனமாக தமிழினம் இருக்கின்றது. மக்களுக்கான போராட்டங்களுக்கு சுதந்திரமில்லை, சமூக வளைதளங்களில் பதிவிற்கான சுதந்திரம் இல்;லை, ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரமில்லை, அரசாங்கத்தின் முட்டாள்தனமான தீர்மானங்களை விமர்சிப்பதற்கு சுதந்திரமில்லை என்ற அடிப்படையில் எமது நிலங்களில் எமக்கான வழிபாடுகளை மேற்கொள்வதற்கான சுதந்திரமும் அற்ற நிலையில் இன்று தமிழ் சமூகம் இருந்துகொண்டிருக்கின்றது.

நீதிமன்ற உத்தரவுகளும் உத்தரவுகளாகவே இருக்கின்றன. அரசின் அச்சாணியாக இருக்கின்ற நீதிமன்றத்தின் உத்தரவுகளை அரச தரப்புகளே மீறும் நிலைமைதான் இன்று இலங்;கையில் இருக்கின்றது. ஒரு நாடு ஒரு சட்டம் என்று உருவாக்கி ஒவ்வொரு பிரதேசத்திற்கும், ஒவ்வொரு இனத்திற்கும், ஒவ்வொரு சாராருக்கும் ஒவ்வொரு சட்டம் என்ற ரீதியில் தான் திகழ்கின்றது.

இந்த நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வின் ஊடாக பொருளாதார மலர்ச்;சி எற்பட்டு எமது இனம் சகல வழிகளிலும் முன்னேற வேண்டும். வடக்கு கிழக்கை மையப்படுத்தி அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆக்;கிரமிப்புகள், திட்டமிட்ட பௌத்த மயமாக்கல்கள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# நீதி அமைச்சரை கேள்வி கேட்கும் வலிந்து காணாமல் ஆக்கபட்ட உறவுகள்





(வடமலை ராஜ்குமார்)

வலிந்து காணாமலாக்கபட்டவர்களுக்கு மரண சான்றிதல் பெறக் கோரும் நீதி அமைச்சர்தனது வீட்டில் ஒருவர் இவ்வாறு காணாமல் ஆக்கபட்டால் எவ்வித தேடுதலும் நடாத்தாமல் மரண சான்றுதலை பெற்றுக் கொள்ள ஒப்புக் கொள்வாரா? என திருகோணமலை வலிந்து காணாமல் ஆக்கபட்ட உறவுகளின் சங்க தலைவி நாகேந்திரன் ஆஷா கேள்வியெழுப்பினார்.

இலங்கையின் 74வது சுதந்திர தினத்தினை வலிந்து காணாமல் ஆக்கபட்ட உறவுகள் கறுப்பு தினமாக அனுஸ்டித்து வரும் நிலையில் அவர்கள் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர். நாடு அன்னியர் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று 74 ஆண்டுகள் கடந்து செல்கின்றபோதும் இன் நாட்டில் வாழும் சகல இன மக்களும் சமனான சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை பெரும்பான்மை மக்களும் அரசாங்கத்தின் ஆளும் தரப்பினருமே இன்று சுந்தந்திரத்தை அனுபவிக்கின்றனர். சிறுபான்மை மக்களும் அவர்களுள் மேலும் பாதிக்கபட்ட வலிந்து காணாமல் ஆக்கபட்ட உறவுகளின் குடும்பத்தாரும் சொல்லென்னா துன்பங்களை அனுபவித்து வருக்கின்றோம்.

ஆரச படைகளின் விசாரனை பின்தொடர்தல் , கண்காணித்தல் என்ற விடயங்களும் எமது குடும்பங்களுக்கு தொடர்ச்ணீயாக இடம் பெற்றுவருவது அவர்களை மன ரீதியாக பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவதுடன் அவர்கள் வறுமையிலும் வாடும் நிலை அதிகரித்தே காணப்படுகின்றது.

இந்த நிலையில் உள்ளக வசிடரனை ஒன்றை நாடாத்தமலேயே அரசு மரண சான்றிதல் ஒன்றை பெறுமாறு எம் மத்தியில் தினிக்கும் இந்த செயற்பாடானதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

மேலும் இலங்கை அரசு ஜக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் வலிந்து காணாமல் ஆக்கபட்ட உறவகளுக்கு நிதி வழங்கவதாக உறுதி அளித்துவிட்டு இலங்கையில் வந்து அதற்கு முறனாக செயற்படுவதை நாம் கண்டிக்கின்றோம்.

எனவே உள்ளக பொறி முறையை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த நாம் சர்வதேச அமைப்பக்களின் விசாரனையையும் பொறிமுறையையும் தீர்வாக முடிவெடுத்து அதனை எதிர்பார்த்து நிற்கின்றோம். என வலிந்து காணாமல் ஆக்கபட்ட உறவுகளின் சங்க தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

# ஆரையம்பதியில் இடம்பெற்ற பிரதேச பொங்கல் விழா 2022







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனைப்பற்று ஆரையம்பதியில் இடம்பெற்ற பிரதேச பொங்கல் விழாவானது கொவிட் 19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கிரான்குளம் ஸ்ரீ கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றலில் ஆலய நிர்வாகத்தினரின் பங்களிப்புடன் பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் மற்றும் கிராம தலைவர்கள் கலந்து கொண்டதுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் பங்குபற்றி ஆற்றல்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலய வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு!!









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின்தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குதந்தை ஸ்டெனிஸ் லொஸ் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா தொடர்ந்து ஒன்பது நவநாட்கள் மாலை திருச்செபமாலையும், மறைவுரைகளுடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு (05) திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி பங்குதந்தை ஸ்டெனிஸ் லொஸ் அவர்களுடன் இணைந்து ஒப்பு கொடுத்திருந்தனர்.

திருப்பலியின் நிறைவில் அன்னையின் திருச்சுருவ பவணியும் அதனை தொடர்ந்து ஆலய முன்றலில் நடைபெற்ற அன்னையின் திருச்சுருவ ஆசியுடன், கொடியிறக்கப்பட்டு ஆலய வருடாந்த திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com

supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com



# ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியும் சர்சைக்குரிய ஹபாயாவும் நடந்தது என்ன ?

### சண்முகவித்தியாலயம் ஏன் எப்படி உருவானது?

தங்கம்மாள் என்ற பெண்மணி 1923ம் ஆண்டு தன் காலம்சென்ற கணவரின் பெயரில் திருகோணமைலயில் சைவ பெண்களுக்கு என்று ஒரு பாடசாலை இல்லாத காலத்தில், அந்த சைவப் பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனது சொத்துக்களை தானமாக கொடுத்து அமைத்த பாடசாலையே இன்றைய ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியாகும்.

திருகோணமலை நகரத்தில் உள்ள அந்தக் கல்லூரியும் இலங்கையில் இருக்கும் எல்லா பாடசாலைகளும் விதி அமைத்து உள்ளது போல் அந்த பாடசாலையும் விதி அமைத்து இயங்கி வருகின்றது அதில் ஒரு விதியே ஆசிரியைகள் சேலை அணிவதுவாகும்

அத்தோடு அந்த பாடசாலை விதிகளில் ஒன்றாக கதியற்றவர்களுக்கு கல்வி அறிவூட்டுவதை கொள்கை ஆக்கி இஸ்லாமிய பெண்களுக்கு அவர்களது சமூகத்தினாலேயே கல்வி மறுக்கப்பட்ட அன்றைய கால கட்டத்திலேயே மத பேதம் அற்று அந்த சகோதர இனத்தை அரவணைத்து கல்வி கற்க வழிசமைத்த பாடசாலை என்பதும் நிதர்சனமானது.

இவற்றுக்கெல்லாம் மேலாய் அந்த பாடசாலையில் அதிகாலை கடவுள் வணக்கம் இடம் பெறும் பொழுது அங்கு பயிலும் மாணவிகளும் அவர்களுக்கு கற்பிற்கும் ஆசிரியர்களும் அவரவர் மதம் சார்ந்த வழிபாடுகளை தனித்தனியாக எவ்வித இன மத முரண்பாடுகளும் இன்றி நடத்தி முடிப்பது மத ஒருமைப்பாட்டின் உச்சம் என்பதோடு, இதனை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இலங்கையர் நாம் என உணர்ந்து பெருமைப்படக் கூடிய விடயத்தில் ஒன்றாகும்.

இதனை உணர்ந்து தமிழர்களோடு ஒன்றாக இருந்த இஸ்லாமிய சமூகத்தை சார்ந்த அனைவரும் தம் தலையை மறைத்து ஆடை அணிந்து பாடசாலைக்கு வந்தார்களே என்றாலும் பொங்கல் வாணி விழா என்ற சரஸ்வதி பூஜை மற்றும் பாடசாலை கோவில் திருவிழா என எம்மோடு ஒன்றாய் நின்றார்கள்.

இப்படி தமிழர்களோடு ஒட்டி தமிழ் கலாச்சாரத்தில் ஒன்றி வாழ்ந்தவரே இன்று சமூகவலைத்தளம் பேசும் அளவிற்கு தரம் உயர்ந்து போய் இருக்கும் இந்த பாத்திமா பஹ்மிதா ஆசிரியையாவார்.

### யார் இந்த பாத்திமா பஹ்மிதா (ஹபாயா டீச்சர்):

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கற்பித்து வந்த பாத்திமா பஹ்மிதா ஆசிரியை பாடசாலையில் அனைத்து ஆசிரியர்களுடனும் மிகவும் அன்பாக, நெருங்கிய நட்பினைப் பேணிய ஓர் இஸ்லாமிய ஆசிரியை என்பதோடு,

நசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இவர் கற்பித்த காலத்தில் பாடசாலையில் இடம்பெறும் இந்து சமய விழாக்களில் தமிழ் சைவ ஆசிரியர்களுடன் சேர்ந்து வாணி விழா தொடங்கி அனைத்து விழாக்களிலும் தானும் மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் மனம் ஒத்து கடமையாற்றிய ஆசிரியையாக இருந்தார்.

கோலம் போடுவது தொடக்கம் ஐயர் வந்து பூஜைகள் சமய சடங்குகள் செய்து முடிக்கும் வரை அனைத்திலும் பங்கேற்றதோடு, ஆசிரியர்களுக்கான கூடைப்பந்து (netball), கயிறிழுத்தல் போட்டி என அனைத்திலும் பங்கேற்ற ஓர் ஆசிரியையாக இருந்ததோடு, தான் பணியாற்றிய ஐந்தாண்டுகளாக பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடையான சேலை அணிந்து அதற்கு ஏற்ற நிறத்தில் ஹீஜாப் அணிந்து பாடசாலைக்கு கடமைக்குச் சென்று வந்த வராவார் இந்த பாத்திமா பஹ்மிதா ஆசிரியை.

22.04.2018 முதல் திடீரென ஹபாயாவுடன் பாடசாலைக்கு சென்றார் என்பதே இன்று உருவெடுத்துள்ள சர்ச்சைக்கான முதன்மை காரணமாகும்.

### இதன் பின்னணி என்ன?

இவரது மௌலவி கணவரது தூண்டுதலினாலும் வேறு பல அரசியல் கட்சிகளின் அரவணைப்புகளினாலும் மற்றும் அடிப்படைவாத இஸ்லாமிய சிந்தனையினாலும் ஆடை விவாகாரத்தை பூதாகரமான பிரச்சனையாக்கி ஆடையை வைத்து அரசியல் செய்கிறார்.

22.04.2018 அன்று அங்கே அந்த ஆடைக்கு அனுமதி இல்லை என்று கல்லூரி நிர்வாகம் கூறிய போது

அதிபர் திருமதி. சுலோசனா ஜெயபாலன் அவர்களை பாடசாலை வளாகத்துக்குள் அமைந்திருந்த அதிபர் குடியிருப்பில் அன்றைய மாலை வேளையில்,

தன் கணவர் மற்றும் சக இஸ்லாமிய ஆசிரியை ஷஜானா பாணு மற்றும் அவரது கணவர், இன்னுமொரு ஆசிரியையான ஷிவானா ஆகியோருடன் சென்று சந்தித்து,

இந்த ஆடை மாற்றம் தொடர்பாக விவாதித்து வாதித்து தூஷித்து மிரட்டி அவரை எச்சரித்துவிட்டு சென்ற இவர்கள்

தமது தவறுகளை மறைத்து ஒட்டு மொத்த இஸ்லாமிய சமூகத்தினரையும் மதத்தின் பெயரால் தூண்டிவிட்டு வாழ்ந்தார்கள் என்றாலும்

இலங்கையில் நடந்த இஸ்லாமிய தீவிரவாத குண்டுத்தாக்குதலின் பின்னர் சற்று மௌனம் காத்து இத்தனை ஆண்டுகளாக ஓய்ந்திருந்த பிரச்சனைக்கு மீண்டும் தூபம் இடுகின்றார்கள்.

அன்பிற்குரிய தமிழ் மூஸ்லீம் உறவுகளே இவர்களின் அரசியல் சதியில் நீங்கள் அகப்பட்டு கொள்ளாதீர்கள்.

இந்த பாடாசலை விவகாரம் தாண்டி கிழக்கு மாகாணத்தில் தமிழ் இஸ்லாமிய உறவும் ஒற்றுமையும் மட்டுமே எம்மையும் எமது இருப்பையும் இலங்கையில் நிலை நிறுத்தும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் 200 இஸ்லாமியப் பிள்ளைகள் கற்கின்றார்கள் என்பதோடு 11 இஸ்லாமிய ஆசிரியர்கள் ஆண் ஆசிரியர்கள் உட்பட கற்பிக்கின்றார்கள் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.

இவர்கள் இந்தப்பாடசாலை சார்ந்த சமூகத்தினால் வெறுக்கப்படவில்லை என்பதோடு இவர்களை எவரும் இனவாதம், மதவாதம் பேசி புறக்கணிக்கவில்லை என்பதும் யதார்த்தமாகும்.

ஆனால் அந்த அடாவடித்தனம் செய்யும் இந்த ஒரு ஆசிரியரை மட்டுமே இந்த பாடசாலைச் சமூகம் வெறுக்கின்றது என்பதோடு அதற்கான காரணமும் தெளிவாக கூறப்படுகின்றது.

இந்தஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றில் எத்தனை ஆயிரம் இஸ்லாமிய மாணவிகள் கற்றார்கள் என்பதும் எத்தனை நூறு ஆசிரியர்கள் கற்பித்தார்கள் என்பதையும் ஆழ்ந்து சிந்தியுங்கள்.

அவரவர்கள் கலாச்சாரம் மதம் சார்ந்த விடயங்களை அவர்கள் தத்தமது இடங்களில் வைத்திருப்பதே நியாயமாகும்.

அந்தக் கலாச்சார விஷயங்களை மற்ற மதத்தவர் இடங்களில் வந்து நடை முறைப்படுத்துவது வீம்பாகும்.

1. இந்த வீம்பிற்கு முண்டு கொடுப்பது யார்?

2. 2000 மாணவர்கள் வெறுக்கும் ஒரு ஆசிரியரை பாடசாலையில் திணிக்க நினைப்பது ஏன்?

3. பிரச்சினையைக் காரணங் காட்டி இன முறுகலைத் தோற்றுவிக்கும் இவர்களின் நோக்கம் என்ன?

4. அத்துமீறி வீடியோ, போட்டோ எடுத்து பிரச்சனையை பூதாகரமாக உருவாக்கி, தான் கொடூரமாகத் தாக்கப்பட்டதாக நாடகமாடிக்கொண்டு சமூகங்களுக்குள் துவேசங்களை பரப்பும் நோக்கில் ஒலி, ஒளிப்பதிவுகளை பதிவதன் நோக்கமென்ன

5. மருத்துவமனை அறிக்கையின் படி உள்காயமோ, வெளிக்காயமோ எதுவுமே இல்லையென்று வீட்டிற்குச் செல்லுமாறு பணித்தும் அடம்பிடித்து அங்கு தனது உறவினர் வைத்தியர் அம்மையாரின் சலுகையில் தங்கி இருப்பது ஏன்?

என்ற என் கேள்விகளை உள்வாங்கி நியாயத்தின் பக்கம் நின்று பேசவேண்டியதே இரு சமூகங்களின் கடமையாகும் என்பதை கூறிக்கொண்டு.

ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் வைத்தியசாலையில் செல்லும் அளவிற்கு இந்த 2022ல் நடந்தது பின்னணியின் சுருக்கத்தை தருகின்றேன்.

கடந்த 22.04.2018 ல் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஹபாயா அணிந்து சென்றதன் காரணமாக மாணவிகள் நடத்திய போராட்டத்தினால் நான்கு ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதன் காரணமாக மாணவிகள் மீது கோபம் கொண்ட அடிப்படை வாத இஸ்லாமிய சமூகத்தினரால் ஒரு விழாவில் பங்கேற்க சென்ற மாணவிகள் தாக்குதலுக்கு உட்பட முனைந்த போது சிங்கள ஓட்டுனரால் காப்பாற்றப்பட்டு அழைத்து வரப்பட்டதை திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் பலரும் அறிவார்கள்.

அத்தோடு ஹபாயா பிர்ச்சனைக்கு ஏதாக போராடிய ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் சிலரின் படங்களை ஆபாசமாக சில இஸ்லாமிய அடிப்படைவாத மூஸ்லீம்கள் செய்ததும் சாட்சி ஆவணமாக கல்லூரியில் இருக்கின்றது என்பதும் பலரும் அறிந்தததே. இந்த சூழ்நிலையில் நான்கு ஆசிரியர்களில் ஒருவரான ஆசிரியை பாத்திமா பஹ்மிதா நீதிமன்றத்தில் தீர்ப்பு வருவதற்கு முன்னரே புரிந்துணர்வின் அடிப்படையில், மீண்டும் ஹபாயா அணிந்து பாடசாலைக்கு கடமை ஏற்க சென்றுள்ளார்.

இதனை அறிந்த பாடசாலை மாணவிகளின் பெற்றோர்கள் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் குழுமிஉள்ளனர் , இதன் காரணமாக சற்று யோசித்து முடிவெடுக்க பாடசாலை அதிபர் அவரை தன் அலுவலகத்திற்கு முன் உள்ள வெளிவிராந்தையில் காத்திருக்க பணித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் மாணவிகள் வெளியே வரத் தொடங்கவும் ஆசிரியை பாத்திமா பஹ்மிதா தனது கையடக்க தொலைபேசியால் அவர்களை படம் எடுத்துள்ளார்.

இதனால் பெற்றோர்களும் மாணவிகளும் விசனமடைய, நிலமையின் விபரீதத்தை உணர்ந்த பாடசாலை அதிபர் அந்த படங்களை அழிக்கும் படி ஆசிரியை பாத்திமா பஹ்மிதாவை பணித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த ஆசிரியை பாத்திமா பஹ்மிதா வயோதிப அதிபரை கீழே தள்ளி விழுத்திவிட்டு தான் முதலில் வைத்தியசாலை சென்று, தான் பலரால் தாக்கப்பட்டதாக கூறி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய சாலையில் கிடைத்த தகவலின்படி இவருக்கு நகக்கீறல் கூட இல்லை என்ற அறிக்கையின் பின்னரும் தனது உறவினரின் செல்வாக்கில் தங்கி இருந்து மிக மெல்லிய குரலில் இரு இனங்களுக்கு இடையே மதவாதத்தை தூண்டும் வகையில் சமூகவலைத்தளங்களில் பேசிவருகின்றார்.

ஆசிரியை பாத்திமா பஹ்மிதா கூறுவது போல் இவர் வெளியாட்கள் பலரால் தாக்கப்பட்டால் தாக்கப்பட்ட ஒருவர் எப்படியாகி இருப்பார் என்ற உண்மைத்தன்மையின் யதார்த்தம் அறிந்து தமிழ் முஸ்லீம் சமூகங்களின் ஒற்றுமையின் தேவையை உணர்ந்து பக்கசார்பாக குரல் உயர்த்துவதை உடன் நிறுத்துங்கள்.

### அன்பு இஸ்லாமிய உறவுகளே!

சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் எவரும் இஸ்லாமிய கலாச்சாரத்துக்கு எதிரானவர்கள் அல்ல சேலை அணிந்து அதற்கு தலை முடியை மறைத்து ஹீஜாப் அணிந்து வருவதற்கு எவரும் தடை விதிக்கவில்லை ஆனால் ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரியில் ஹபாயா ஏற்கப்படவில்லை என்ற நிர்வாக சட்டதிட்டங்களை மதிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

இதனை விட ஒரு ஆசிரியை ஹபாயா அணிந்து வருவது அங்கு கல்வி கற்கும் மாணவிகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் பிடிக்கவில்லை என்றால் ஆசிரியை பாத்திமா பஹ்மிதா அவர்கள் ஹபாயா அணிந்து செல்லக்கூடிய பாடசாலைக்கு செல்வதே சாலச்சிறந்தது என்ற யதார்த்தத்தை உணர்ந்து திருகோணமலைவாழ் தமிழ் முஸ்லீம் மக்கள் ஒற்றுமைக்காக ஆவன செய்யுங்கள்



**சுவாமி சங்கரனந்தா**
**முகப்புத்தகத்திலிருந்து**